கருக்கம்

பணியமைப்பு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – அரியலூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில், மாவட்ட ஊராட்சிக்கு பணியிடங்கள் தோற்றுவித்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ.5) துறை

அரசாணை (நிலை) எண்.35

நாள்:23.04.2013

படிக்கப்பட்டவை:

1. அரியலூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முகக் கடித எண்.4220/2011, ஊ.வ.8, நாள் 06.11.2011 மற்றும் 02.12.2011.
2. திருப்பூர் மாவட்ட ஆட்சியர் கடித எண்.4323/2011/வி.1, நாள் 28.10.2011 மற்றும் 11.11.2011.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடித ந.க.எண்.80570/2011/எப்.1, நாள் 24.02.2012.

*****

**ஆணை:**

அரசாணை (நிலை ) எண்கள் 48 மற்றும் 49, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ப.ரா.2) துறை, நாள் 25.08.2011–ன்படி, ஒருங்கிணைந்த பெரம்பலூர் மாவட்ட ஊராட்சியானது, பெரம்பலூர் மாவட்ட ஊராட்சி மற்றும் அரியலூர் மாவட்ட ஊராட்சி என இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது எனவும், அதனையடுத்து அரசாணை (நிலை) எண். 55, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ஊ.2) துறை, நாள்.08.09.2011–ன்படி, இரண்டு மாவட்டங்களுக்கும், கிராம ஊராட்சித் தலைவர், ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் , மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர், மாவட்ட ஊராட்சி தலைவர் ஆகிய பதவிகளில் எண்ணிக்கையை நிர்ணயம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது எனவும், மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கான உயர்நிலைக் குழுவின்படி ஏற்றுக் கொள்ளப்பட்ட பரிந்துரை எண். 18 ன்படி, அரசாணை (நிலை) எண்.121, ஊரக வளர்ச்சி (இ1) துறை, நாள்.06.07.1999–ல் குறிப்பிட்டவாறு, உதவி இயக்குநர், மாவட்ட பஞ்சாயத்துக்களில் பணியமர்த்தப்பட்டுள்ள செயலர்களே பதவிவழி மாவட்டத் திட்ட அலுவலர்களாகவும் செயல்பட அனுமதிக்கப்படுகிறார்கள். இவர்களது சம்பளம் மற்றும் இதரப்படிகள் மாவட்ட பஞ்சாயத்துக்களின் நிதியிலிருந்து வழங்கப்படும் எனவும், புதியதாக தோற்றுவிக்கப்பட்ட அரியலூர் மாவட்ட ஊராட்சிக்கு உள்ளாட்சித் தேர்தல் முடிந்த நிலையில் புதிய மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் மற்றும் தலைவர் ஆகியோர்கள் பதவி ஏற்றுள்ளதால் மாவட்ட ஊராட்சி தொடர்பான பணிகளை நடைமுறைப்படுத்த புதியதாக உருவாக்கப்பட்ட மாவட்ட ஊராட்சி செயல்படும் வகையில், பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ளது போல் பணியிடங்களை அரியலூர் மற்றும் திருப்பூர் மாவட்ட ஊராட்சிகளுக்கு தோற்றுவிக்கப்பட, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், அரியலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோரின் கருத்துருக்களை, மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அரசுக்கு பரிந்துரைத்துள்ளார்.

2) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் பரிந்துரையினை அரசு கவனமாக ஆய்வு செய்தது. 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 24–ன்படி ஒவ்வொரு மாவட்டத்திலும்

மாவட்ட ஊராட்சி அமைக்க வழி வகை செய்யப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் நிர்வாக அறிக்கையினை ஒருங்கிணைத்தல் மற்றும் மாவட்டத்தின் ஆண்டறிக்கையைத் தயாரித்தல், மாவட்ட வளர்ச்சித் திட்டம் தயாரித்தல் போன்ற பணிகளை மாவட்ட ஊராட்சி செய்து வருகிறது. மாவட்ட ஊராட்சி செயலர், மாவட்ட திட்ட அலுவலராக செயல்படுகிறார். அவருக்கு உறுதுணையாக பணியாற்றிடவும் மாவட்ட ஊராட்சி பணிகளை திறம்பட செயல்படுத்துவதற்கும், மாவட்ட ஊராட்சிக்கு பணியாளர்களை தோற்றுவிப்பது அவசியமாகிறது. அதன்படி, அரியலூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களுக்கு ஒவ்வொரு மாவட்டத்திற்கும், கீழ்க்காணும் மாவட்ட ஊராட்சி பணியிடங்கள் தோற்றுவிக்கப்படுகிறது.

| வ. எண் | மாவட்ட ஊராட்சி | பணியிட எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | ஊராட்சி செயலர் ( உதவி இயக்குநர் நிலையில் ) | 1 |
| 2 | உதவியாளர் | 1 |
| 3 | இளநிலை உதவியாளர் | 1 |
| 4 | ஈப்பு ஓட்டுநர் | 1 |
| 5 | அலுவலக உதவியாளர் | 1 |
| | மொத்த பணியாளர்கள் | 5 |

3) மேற்கண்ட பணியிடங்களில், உதவியாளர் மற்றும் இளநிலை உதவியாளர்கள் போதிய கணினி / தட்டச்சு அறிவு உள்ளவர்களாக நியமனம் செய்யப்பட வேண்டும் எனவும், ஈப்பு ஓட்டுநர் பணியிடம் டெக்ஸ்கோ (Texco) மூலம் நிரப்பப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில், அரியலூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களுக்கு, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மேற்காணும் 5 பணியிடங்களை தோற்றுவித்து, அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ச.வி.சங்கர்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை–15.
மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அரியலூர் / திருப்பூர் மாவட்டம்.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, சென்னை–108.
மாநிலக் கணக்காயர், சென்னை–18,
இயக்குநர், கருவூலம் மற்றும் கணக்குகள் துறை, சென்னை–18.
மாவட்ட கருவூல அலுவலகம், அரியலூர் / திருப்பூர் மாவட்டம்.

நகல்.
மாண்புமிகு முதலமைச்சரின் செயலரின் தனிச் செயலாளர், தலைமைச் செயலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள்)
நிதித் துறை, சென்னை–9.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.
29/4/13